# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 119/விசாரணை/E/2019 (SA 1369/E/2018)**

திரு.க.சிவராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 26.06.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்ட திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலரின் 29.08.2025 தேதியிட்ட அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 12.01.2026 அன்று இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தின் 26.06.2025 தேதியிட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதால், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.
2. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்கள் குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் வழங்கப்படாததால், அவரது மனைஉளைச்சலுக்காக சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி ரூ.3,000/- (ரூபாய் மூன்று ஆயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பு வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை 12.02.2026 அன்று மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்ப்பிக்குமாறு மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

2. மேற்குறித்த இவ்வாணையத்தின் 12.01.2026 தேதியிட்ட உத்தரவு 2 தொடர்பாக, மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக லால்குடி வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் 12.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி,

மண்ணச்சநல்லூர் வட்டாட்சியரின் 11.02.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் 11.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவின்படி, மேல்முறையீட்டாளருக்கு 11.02.2026 அன்று நஷ்டஈடாக ரூ.3,000/- நேரடியாக வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து, அதன் நகலை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

4. ஏற்கனவே இவ்வழக்கினை 12.01.2026 அன்று முற்றாக்கம் செய்து உத்தரவிட்டுள்ளதால், மேல்முறையீட்டு அலுவலரின் அறிக்கையை இவ்வாணையம் பதிவு செய்து உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC 119/விசாரணை/E/2019 (SA 1369/E/2018)**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாசியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம்-621 005.

திரு.க.சிவராஜ்
4/35 வெங்கங்குடி, பள்ளிவிடை (அ),
மண்ணச்சநல்லூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்-621 112.

Copy to: File
RJ/PS 7.4